


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## DECEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 21.12.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்












## தமிழக நிகழ்வுகள்

- சென்னை சாந்தோம் மாநகராட்சி பள்ளியில், **தமிழ்நாட்டின் முதல் "மாற்றுத் திறனாளிக்கான உணர்வு பூங்கா"** அமைக்கப்பட்டுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- இந்திய **விமானப்படையின் தகவல்** தொடர்புக்காக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்த **G SAT – 7A என்ற செயற்கைகோள் GSLV – F11 ராக்கெட் மூலம்**, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள 2வது ஏவுதளத்தில் **டிசம்பர் 19** அன்று, வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
  - 2250 எடை கொண்ட ஜிசார்ட் 7ஏ செயற்கை கோள் மூலம் விமானப்படைக்கு தேவையான தகவல்களை பெற முடியும்.

- பணியிடங்களில் **பெண்கள் பாலியல் அச்சுறுத்தலுக்கு** உள்ளாவதை **தடுக்கும் சட்டத்தை ஜம்மு & காஷ்மீர்** மாநிலம் இயற்றியுள்ளது. மேலும் மாநில நிர்வாகமானது **"ரன்பீர் தண்டனைச் சட்டத்தை (RPC – Ranbir Penal Code)** திருத்தம் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.
  - இதன்மூலம் பணியாளர்களை பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்துவதைத் தடுப்பதற்காக சட்டம் இயற்றிய நாட்டின் முதல் மாநிலமாக ஜம்மு & காஷ்மீர் உருவெடுத்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **மெரியம் வெப்ஸ்டர்** (Merriam – Webster) என்ற அகராதியானது **2018ம் ஆண்டிற்கான** வார்த்தையாக **"நீதி"** (Justice) எனும் வார்த்தையை அறிவித்துள்ளது.
  - மெரியம் வெப்ஸ்டரின் இந்த நீதி எனும் சொல்லானது இனநீதி, சமூகநீதி மற்றும் நீதியில் ஏற்படும் தடைகள் எனும் பல சொற்தொடர்களில் பயன்படுத்தப்படுகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- இந்திய **பெண்கள் கிரிக்கெட்** அணியின் **புதிய பயிற்சியாளராக**

முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் **W.V. ராமன் (W.V. Raman)** என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- இவர் இதற்கு முன், ரஞ்சி டிராபி போட்டியில், தமிழ்நாட்டின் பயிற்சியாளராக பணியாற்றினார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- அமெரிக்காவின் பூர்வீக தொல்லியல் தளத்தில் **1000 ஆண்டுகளுக்கு முந்தைய** உலகின் மிகப் பழமையான **தாவர வைரஸ் வகையைச்** சேர்ந்த **"ஜீயோ மே க்ரைசோவைரஸ்" (Zea May Chryso Virus 1 – ZMCVI)** எனப் பெயரிடப்பட்ட வைரஸை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

## விருதுகள்

- அமெரிக்காவின் **நியூ ஜெர்சியின் ∴போர்ட்ஸ் சிட்டியில்** நடைபெற்ற, 2018 உலகளாவிய இந்திய அழகிக்கான **(Miss India World Wide – 2018)** போட்டியில் இந்திய – அமெரிக்கர் **"ஸ்ரீ சைனி"** என்பவர் பட்டம் பெற்றுள்ளார்.

## நியமனங்கள்

- **மத்திய** அரசின் **கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாக** (Additional Solicitor General – ASG) வழக்குரைஞர் **"மாதவி கோரதியா திவானை"** மத்திய அரசு நியமித்துள்ளது.
    - இவர் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாக பதவி வகிக்கும் மூன்றாவது பெண்மணி ஆவார். ASG ஆக பதவிவகித்த முதல் பெண்மணி "இந்திய ஜெய்சிங்" ஆவார்.

## முக்கிய தினங்கள்

- **கோவா விடுதலை தினம் - டிசம்பர் 19**
    - போர்ச்சுக்கீசிரியர்களின் பிடியில் இருந்து, கோவா மாநிலமானது 1961 டிசம்பர் 19ல் "ஆபரேஷன் விஜய்" எனும் இராணுவ நடவடிக்கையின் மூலம் இந்தியாவுடன் இணைத்துக்

கொள்ளப்பட்டதன் நினைவாக கோவா விடுதலை தினம் ஆண்டுதோறும் டிசம்பர் 19 அன்று கொண்டாடப்படுகிறது.

- இது கோவாவின் 57வது விடுதலை தினமாகும். கோவா இந்தியாவின் 25வது மாநிலம் என்ற பெருமையை 1987ல் பெற்றது.

We Shine Academy™